

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பாலமேட்டில் நடைபெற்ற தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் பல்லாயிரக்கணக்கான கழகத்தினர் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம் என உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், தனச்செல்வம், வடிவேல் முருகன், புதூர் சேகர், ஜி.பி.ராஜா, டாக்டர் திலீப் ராஜ கண்ணப்பன், சுபத. சம்பத், விஜய கதிரவன், வீர கணேசன், நேரு பாண்டியன், கணேசன், அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், தன்ராஜ், முத்தையன், பரந்தாமன், அருண்குமார், பால ராஜேந்திரன், பசும்பொன்மாறன், ஆர்.கே.ஜெயராமன், பால்பாண்டியன், மனோகரவேல் பாண்டியன், ரகுபதி, சத்யபிரகாஷ், பரவை மனோகரன், ராசாமணி, ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், ஆதிசங்கர், ஜெயராமன், பெ.சசிக்குமார், கௌரிசங்கர், மதி வெங்கடேஷ், சுதன், காவேரி, வீரராகவன், பாலாண்டி, வெற்றிச்செல்வன், அன்புச்செல்வன், மருதுராஜா, ஆர்.கே.பிரபு உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.



நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் திருப்புவனம் வட்டம், கீழடி அருங்காட்சியகத்தில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் சிந்துவெளி ஆய்வு மையம் இணைந்து நடத்திய கீழடியில் சிந்துவெளி நாள் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தலைமையில் பங்கேற்று, நூல்கள் மற்றும் ஆய்விதழ்களை வெளியிட்டு சிறப்பித்தனர். உடன் சிந்துவெளி ஆய்வு மைய மதிப்புறு ஆலோசகர் ஆர். பாலகிருஷ்ணன், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார்,இயக்குநர் (இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை, டெல்லி) அமர்நாத் ராமகிருஷ்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, இணை இயக்குநர் (தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை) முனைவர் இரா.சிவானந்தம், கல்வி மற்றும் ஆய்வு ஆலோசகர் (தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை) பேரா.கா.ராஜன், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா, இயக்குநர் (ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்) முனைவர் சுந்தர் கணேசன் உட்பட தொல்லியல் துறையைச் சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை! மயிலத்தில் பள்ளி தலைமை

# ஆசிரியர்களுக்கான அடைவுத் தேர்வு ஆய்வுக் கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. — முன்னணியினர் பங்கேற்பு!

மைலம் செப். 22-

தலைமை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் வகுப்பறைக்கு அடிக்கடி சென்று மாணவர்களின் கற்றல் திறனை கேட்டு அறிந்து அவர்களுக்கு புரியும் வகையில் பாடம் நடத்திட வேண்டும் என பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பின் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்ட பள்ளி கல்வி துறை சார்பில் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவு தேர்வு 2025 ஆய்வு கூட்டம் மயிலம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு ஆய்வுக் கூட்டத்தை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து நடப்பு கல்வி ஆண்டில் 7.5% இட ஒதுக்கீட்டில் முதலிடம் பெற்று மருத்துவ கல்லூரி சேர்ந்த மாணவியையும்,

3700 மாணவர்களுக்கு மேல் பள்ளி சேர்க்கையை செய்த ஆசிரியர்களுக்கும்,

17 ஆண்டுகள் தொடர்ச்சியாக 100% தேர்ச்சியை வழங்கிய ஆசிரியர்களுக்கும்தொடர்ச்சியாக அதிக பாடங்களில் 100% தேர்ச்சி பெற்றுக் கொடுத்த ஆசிரியர்களை பாராட்டி சான்றிதழ்களைஅவர் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் தொடக்கக் கல்வி இயக்குனர் முனைவர் நரேஷ்,விழுப்புரம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறு வனத்தின் முதல்வர் முனைவர் ராமலிங்கம்,திண்டிவனம் மாவட்ட கல்வி அலுவலர் சிவசுப்பிரமணி யன் கலந்து கொண்டனர்.

ஆய்வுக் கூட்டத்தில் பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி பேசுகையில்:

பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான அடைவுத் தேர்வு ஆய்வு கூட்டம் விழுப்புரம் மாவட்டம் முப்பதாவது கூட்டமாக உள்ளது .

இந்த கல்வியாண்டில் விழுப்புரம் மாவட்டத்தில் 100% தேர்ச்சி பெற வேண்டும் அதற்கு தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து ஆசிரியர்களும் சிறப்பாக கடமை உணர்வுடன் பணியாற்ற வேண்டும்.

மாணவர்களுக்கு கல்வி கற்பித்தவுடன் அவர்களுக்கு புரிதல் வந்து விட்டதா என்பதைஆசிரியர்கள் கண்காணிக்க வேண்டும். தலைமை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மாணவர்களின் வகுப்பறைக்கு சென்று மாணவர்களின் கற்றல் திறனை கேட்டு அறிய வேண்டும்.

கல்வித்துறைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை அறிவித்து வருகிறார்.

அந்தவகையில்காலையில் பள்ளிக்கு வராமல் குழந்தைகள் நின்று விடக்கூடாது என்பதற்காக தொலை நோக்கு சிந்தனையுடன் முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்.

உலக நாடுகள் வியந்து பார்க்கும் வகையில்அன்பு கரங்கள் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் தாய் தந்தையை இழந்து வாடும் குழந்தைகளுக்கு மாதம் 2000 ரூபாய்வழங்கி வருகிறார்.

கல்வி கற்பதற்கு எந்த ஒரு தடையும் இல்லாமல் ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும்.

கல்வித்துறையில் முதலீடு செய்பவர்களுக்கு பணம் திரும்ப கொடுக்க மாட்டார்கள்

ஆனால் மிகச் சிறந்த அறிவு சார்ந்த சமுதாயம் என்ற நிதியை வட்டியுடன் சேர்ந்து ஆசிரியர்கள் கொடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக மயிலம் கல்லூரிக்கு வருகை தந்த அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ புத்தகம் வழங்கி வரவேற்றார். இதில் மைலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர் மணி மாறன் ஆகியோர் உடன் இருந்தனர்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள், பள்ளிக் கல்வித் துறை சார்பில், பள்ளி கட்டிடங்களை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து, வளவனூர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு 11 வகுப்பறை கட்டிடத்தை, திறந்து வைத்தார். விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், வளவனூர் பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா, வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத், தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ் , மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எஸ்.முத்துக்குமார்

**செப்டம்பர் 22 (2022)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து கோவை பகுதியில் கழக வளரபாடுபட்டவர்.**

**1953ஆம் ஆண்டு கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையை ஏற்று கலந்து கொண்டதற்காக தண்டனை பெற்று கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.**

**சிறையில் இருந்தபோது, மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்துவிட்டு விடுதலை பெறலாம் என்று அன்றைய அரசாங்கம் சொன்னபோது, "எனது உயிரற்ற உடல் வேண்டுமானல் வெளிய வரும். ஆனால், நான் மன்னிப்பு கேட்டு வெளியே வரமாட்டேன்." என்ற முழக்கமிட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**சிறைவாசம் முடிந்து விடுதலை அடைந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறைவாசலில் வந்து வரவேற்ற பெருமைக்குரியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சிவகங்கை மாவட்ட சுற்றுச்சூழல் அணி தேவதாஸ்- மாவட்ட பிரதிநிதி ஈஸ்வரன் இல்ல மணவிழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்–தமிழரசி–மாரியப்பன் கென்னடி–நாகனி செந்தில்–வல்லபாய் பங்கேற்பு



சிவகங்கை, செப்.22-

சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் மாவட்ட தி.மு.க. சுற்றுசூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஒன்றிய மேனாள் இளைஞரணி அமைப்பாளர் தொழிலதிபர் தேவ தாஸ் மகன் செண்பகராஜ்-க்கும் மாவட்ட பிரதிநிதி,

ஒன்றிய மேனாள் கவுன்சிலர், சங்கங்குளம் ஈஷவரன் மகள் தர்ஷனாவிற்கும் திருப்புவனத்தில் திருமணம் நடைபெற்றது.

மாவட்ட திமுக துணைச் செயலாளர் பேரூராட்சி தலைவர் த. சேங்கை மாறன் முன்னிலையில் நடைபெற்ற இந்த மணவிழாவினை தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர், சிவகங்கை மாவட்ட தி.மு.க. செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் கலந்து கொண்டு நடத்தி வைத்தார்... சேங்கைமாறன் வரவேற்புரையாற்றிட நடைபெற்ற இந்த மணவிழாவில் மேனாள் அமைச்சர் முகவை தென்னவன், மானா மதுரைசட்டமன்ற உறுப்பினர் மேனாள் அமைச்சர் ஆ. தமிழரசி ரவிக்குமார், சட்டமன்ற

மேனாள் உறுப்பினர்கள் ஒன்றியக்கழக செயலாளர் சுப. மதியரசன், சேர்மன் எஸ்.மாரியப்பன் கென்னடி, மேற்கு ஒன்றியக்கழக செயலாளர் வசந்தி சேங்கைமாறன்

திருமலை முத்து ராமலிங்கம், வழக்கறிஞர் இராஜாமணி, அண்ணாத்துரை, முத்துச் சாமி மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ்.ஏ. வல்லபாய், மாவட்ட துணை அமைப்பாளர் மணலூர் கேளம். பொற்கோ, அறிவுக்கரசு, கலை இலக்கிய பேரவை திருநாவுக்கரசு, அண்ணாமலை, திருமலை குமணன், இளைஞரணி

¬கண்ணன் சென்னை சிவா எண்டர்பிரைஸஸ் சிவக்குமார், தேளி கோபால் மடப்புரம், ஜெயக்கொடி மடப்புரம் மகேந்திரன், அரசு ஒப்பந்ததாரர் மணி முத்து தொண்டரணி ராஜா மீனாட்சி சுந்தரம், சக்தி முருகன், புவனேஷ்வரன்,

கலுங்குபட்டி முருகன், காளிதாஸ், பாண்டியார் கிருஷ்ணன், திருப்பதி, விளையாட்டு மேம்பாட்டு அணி செந்தில்குமார்,

தட்டாங்குளம் துரை உள்ளிட்ட திமுக மற்றும் தொழில் சார்ந்த பிர முகர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மணமக்கள் வீட்டாரான மாவட்ட திமுக சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் தேவதாஸ், மாவட்ட பிரதிநிதி சங்கங்குளம் ஈஷ்வரன் வீட்டார் சிறப்பாக செய்திருந்தனர்.




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் பேட்டை மல்லிமால் தெருவில் மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் தலைமையில் மத்திய மாவட்ட அவைத் தலைவர் முருகன் முன்னிலையில் நடைபெற்றது. பேட்டை பகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் சங்கர் வரவேற்புரையாற்றினார்.இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. தலைமை கழக பேச்சாளர் மதிமாறன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மைதீன்கான்,மாநில வர்த்தக அணி செயலாளர் மாலைராஜா, மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன்,மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன் தினேஷ்,மாவட்ட துணை செயலாளர் கள் சுரேஷ்,தர்மன்,மாநகர துணை செயலாளர் பிரபு,பகுதி பொறுப்பாளர் கள் சுப்பிரமணியன்,நமச்சிவாயம், அண்டன் செல்லதுரை,டாக்டர் சங்கர், சையது மைதீன்,துபாய் சாகுல், சாமுவேல்,மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,துணை மேயர் ராஜ், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில்ஒன்றிய செயலாளர் மணிமாறன் ஏற்பாட்டில் ரெட்டனை ஊராட்சியில்பாமக, தேமுதிக, பா.ஜ.க. கட்சியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்எல்ஏ முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.கழகத்தில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சால்வை அனிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்து சிறப்புரையாற்றினார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மைலம்ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், பொதுக்குழு உறுப்பினர் வீடூர் ரவி,ஒன்றிய கவுன்சிலர் ராஜ் பரத் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.